வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.5/21

வழக்கு சாட்சி - அ.சா.2

| | |
|---|---|
| பெயர் ராஜேஷ் | ஜாதி |
| தந்தைபெயர் | தொழில் |
| கிராமம் | சமயம் |
| தாலுக்கா | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 04.05.23

**( 1** ம் எதிரி ஆஜர்**. 2** ம் எதிரி ஆஜர் இல்லை**. 2** ம் எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் போடி சில்லமரத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் சுப்பர்வைஸசியராக வேலை செய்துவருகிறேன். அசா1 என்மனைவி. ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் என் மனைவியின் செயினை அறுத்து சென்றது. 12.10.18 ம் தேதி என் மனைவி தேனிக்கு மீட்டிங்காக சென்றிருந்தார். என் மனைவி வேலை பார்க்கும் தலைமை அலுவலகம் சிவாஜி நகரில் அமைந்துள்ளது. 9.45 மணியளவில் என் மனைவி சென்றுக்கொண்டிருக்கும் போது செயினை அறுத்து சென்றதாக என் மனைவி என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார். அப்போது நான் எனது அலுவலகத்திலிருந்துதேன். நான் உடனே அலுவலகத்திலிருந்துகிளம்பி சிவாஜி நகருக்கு சென்று பார்த்துவிட்டு தேனி காவல்நிலையத்தில் நானும் எனது மனைவியும் சென்று புகார் கொடுத்தோம். அதன்பின்பு 17.2.19 காவல்நிலையத்திலிருந்து போன் பண்ணி செயினை அறுத்து சென்றவர்கள் கிடைத்துவிட்டதாக சொல்லி எங்களை காவல்நிலையம் வரசொன்னதன் பேரில் நாங்கள் காவல்நிலையம் சென்றோம்.. அங்கு வைத்து தான் எதிரியை நான் பார்த்தேன். எனது மனைவியின் செயினை அடையாளம் கேட்டார்கள் நான் காட்டினேன். அதற்கு பிறகு நீதிமன்றம் மூலம் எங்கள் செயினை பெற்றுக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.